[30th March 1966

Standard Motor Products of India, Vandalur

* 503 *Q.*—Sri V. SANKARAN :
Sri T. P. ALAGAMUTHU :
Sri S. J. RAMASWAMI : } Will the Hon.

the Minister for Industries be pleased to state whether it is a fact that the Standard Motor Products of India Limited, Vandalur, Madras, is hampered in its production with the imminent danger of effecting a lay off of a portion of its labourers due to the inability to secure adequate Foreign Exchange to import its normal quota of foreign components?

The Hon. Sri R. VENKATARAMAN : Yes.

திரு. செ. மாதவன் : இந்த ஸ்டாண்டர்ட் மோட்டார் கம்பெனி மறுபடியும் உற்பத்தியைத் தொடங்குவதற்கு ஒரு திட்டம் போட்டு மத்திய சர்க்காருடைய அனுமதி கேட்டிருக்கிறார்கள் என்பது உண்மையா? அப்படியானால் எப்போது உற்பத்தி தொடங்குவார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பிப்ரவரி மாதத்தில் 12½ லட்சம் ரூபாய்க்கு இம்போர்ட் லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை வைத்துக்கொண்டு அவர்கள் உற்பத்தியைத் தொடங்கமுடியும். பின்னால் ஏப்ரல் மாதம் வரை 12½ லட்சம் ரூபாய் வரை அனுமதிக்கப்படுகிறது. மேற்கொண்டு அதற்குப் பின்னால் அனுமதி கொடுக்கலாம் என்று எதிர்பார்க்கலாம்.

திரு. வை. சங்கரன் : நம்முடைய ராஜ்யத்தில் கனரகத் தொழில்கள் நிறைய இல்லாமையினாலே, இதுபோன்று உருக்கு, சில பார்ட்டுகள் கிடைக்காமல் இருக்கின்றன. அவைகள் வெளி நாடுகளில் இருந்துதான் வாங்கவேண்டியிருக்கிறது. ஆகையால், அப்படி வாங்குவதற்கு ஃபாரின் எக்ஸ்சேன்ஜ் பூராவும் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும். ஃபாரின் எக்ஸ்சேன்ஜ் ஒரு வரம்புக்குத்தான் கொடுக்கப்படும். போதிய ஃபாரின் எக்ஸ்சேன்ஜ் இல்லாத காரணத்தினால் எல்லோருக்கும் விகிதாசாரப்படி குறைக்கப்படுகிறது.

திரு. வை. சங்கரன் : ஏற்கனவே நம்முடைய ராஜ்யத்திலே திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் இருந்து பனை ஈர்க்கு போன்றவை அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. அவற்றை அதிகமாக அனுப்பி ஃபாரின் எக்ஸ்சேஞ்சை அதிகமாக்கலாம் அல்லவா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஸ்டாண்டர்டு மோட்டார் பற்றிய கேள்வி இது. பனை ஈர்க்கு பற்றித் தெரியாது.

திரு. செ. மாதவன் : கிடைக்கக்கூடிய கார்களிலேயே ஸ்டாண்டர்டு கார்தான் கொஞ்சம் சுலபமாகக் கிடைக்கிறது. நம்முடைய ராஜ்யத்தில் உற்பத்தியாகிறது. இதற்கு ஏற்பட்

30th March 1966]

டிருக்கிற கஷ்டத்தைப் போக்க நம்முடைய அரசாங்கம் அதிக முயற்சி எடுத்து கூடுதலாக ஃபாரின் எக்ஸ்சேஞ்சு கொடுக்க வழி செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்முடைய அரசாங்கம் உதவி செய்ய முடியுமானால் எப்போதும் செய்யத் தயங்குவதில்லை அந்நியச் செலாவணியை நாம் கொடுக்க முடியாது. ஓரளவு இதைப்பற்றியெல்லாம் மத்திய சர்க்காரிடத்தில் சொல்லித்தான் 12½ லட்சம் ரூபாய்க்குப் புதிதாக அந்நியச் செலாவணி கொடுக்கப் பட்டிருக்கிறது.

கள்ளக்குறிச்சியில் பலதொழிற் பயிற்சிப் பள்ளி

* 504 கேள்வி.—**திரு. எல். ஆனந்தன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா :

(அ) நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில் ஒரு பாலிடெக்னிக் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை ?

(உ) கள்ளக்குறிச்சி தாலுக்காவில் அதை ஏற்படுத்தும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) There is a proposal to establish a Polytechnic in Cuddalore.

(*c*) No.

கூட்டுறவு நூற்பு ஆலை, காஞ்சிபுரம்

* 505 கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா :

(அ) செங்கல்பட்டு மாவட்டம், காஞ்சீபுரத்தில் உள்ள கூட்டுறவு நூற்பு ஆலைக்கு கதிர்கள், மெஷினரிகள், நூற்பாலைக் கட்டிடங்கள் ஆகியவைகளுக்கு தனித்தனியே செலவு செய்யப் பட்ட தொகை எவ்வளவு ?

(இ) பங்கு மூலதனமாக செலுத்தப்பட்ட (ஷேர் காபிடல்) தொகை எவ்வளவு ?

(உ) அரசாங்கத்தால் கடனாக கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?